# மயிலாடுதுறை நகராட்சி

குறள்: தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

பொருள்: தீய செயல்களால் பிறர்க்கும் நமக்கும் தீமையே விளையும். எனவே தீய செயல்களைத் தீயைக்காட்டிலும் கொடுமை மிக்கதாக கருதி அவற்றைச் செய்ய அஞ்ச வேண்டும்.

கூட்ட எண்: 11/2022

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை

நாள்: 28.11.2022

## சாதாரண கூட்டம்

அன்புடையீர்!

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரண கூட்டம் 2022–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30.11.2022 புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.

1. நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோரிகளின் அக்டோபர் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 296 நாள்: 30.11.2022**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது.**

2. மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு அதிக அளவில் பழுது ஏற்பட்டதன் காரணமாக தற்பொழுது பயன்பாடற்ற நிலையில் உள்ள பழைய சைக்கிள் வண்டிகள், தள்ளு வண்டிகள், டிம்பர் பின்கள், கை டிராக்டர்கள் ஆகியவை கீழ்கண்ட விபரப்படி உள்ளது.

| **வ. எண்** | **பொருட்களின் பெயர்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | சைக்கிள் வண்டிகள் (Tri Cycle) | 12 |
| 2 | குப்பை கொட்டுதல் தொட்டி (Dumper Placer bins) | 25 |
| 3 | தள்ளு வண்டிகள் (Push carts | 46 |
| 4 | கை டிராக்டர் (Hand Mini Tractors) | 02 |
| 5 | நாய் கூண்டு (Dog catching lags) | 01 |

மேற்கண்ட விபரப்படி பயன்பாடற்ற நிலையில் உள்ள பழைய பொருட்களை கழிவு செய்திட தயார் செய்யப்பட்டுள்ள ஏல உத்தேச மதிப்பீட்டுத்தொகை **ரூ.1.13 இலட்சம்** ஆகும். இத்தொகையினை அடிப்படையாக கொண்டு பொது ஏலம் இட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு ஏல அறிவிப்பு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 03368/2022/எச்1**

**மன்றத் தீர்மானம் எண். 297 நாள்: 30.11.2022**

**அலுவலக குறிப்பு: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**3.** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**3**, பிளாக் எண்.**36**, நகரளவு எண்.**51** –ல் **1429** சதுரடி இடம் தொடர்பாக திரு. பாலாஜி த/பெ. வெங்கட்ராஜுலு என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP.NO.2231/2015 வழக்கில் ஆஜராகிட, வழக்கு கட்டணம் ரூ.**18000/–**(ரூபாய் பதினைந்தாயிரம்) வழங்குமாறு சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி. ஸ்ரீநிவாஸ் என்பவரால் கோரப்பட்டடுள்ளது. ஏனவே மேற்கண்ட கட்டணத்தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**4359/2021/அ2

**<u>மன்றத் தீர்மானம் எண். 298 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**4.** இந்நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு தேவையான கணினி உபகரணங்கள் **15.10.2022–**ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் அவசரம் அவசியம் கருதி கீழ் கண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து மூன்று விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வரிவை எண் | நிறுவனங்களின் பெயர் | கணினி Kyocera printer drum 1 Nos. | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1 | Digital India solution – Salem | 7200/- | 50976/- |
| 2 | MM Office Automation –Salam | 6880/- | 48710/- |
| 3 | Marvel Computer & Electronics- Salem | 6500/- | 46020/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று நிறுவனத்தின் விலைப்புள்ளிகளில் வரிசை எண்.**3–**ல் உள்ள Marvel Computer & Electronics – Salem நிறுவனம் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், Marvel Computer & Electronics – Salem நிறுவனத்திற்கு விநியோக ஆணை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1688/2020/டி2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 299. நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கப்பட்டது.**

**5.** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகன எண். TN82 H 0346 டாடா ஏசி வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு பழுது ஏற்பட்டுள்ள பணிகளை சரிசெய்திட ஆகும் உத்தேச செலவினத்திற்கு ரூ.**80,000/–**(எண்பதாயிரம் மட்டும்) **–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: 1.** அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதிப்பெறப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3387/2022/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 300 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**6.** மயிலாடுதுறை நகராட்சியில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்பணியாளர்களில் திரு.K.செந்தில் ஒப்பந்ததாரர் என்பவர் **2020–21–**ம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட முன்பணத்தொகை வழங்கிடக்கோரியுள்ளார். மேற்படி வைப்புத்தொகைகள் காலங்கடந்துவிட்டதால், காலங்கடந்த முன்வைப்புத்தொகை பதிவேட்டில் இருந்து கீழ்காணும் விபரப்படி வழங்கலாம்.

| வ. எண். | பணியின் பெயர் | EMD தொகை | ஒப்பந்ததாரர் வைப்புத்தொகை பதிவேட்டில் பக்க எண் மற்றும் வரிகை எண் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.27, சின்னக்கண்ணாரத்தெருவிற்கு மழைநீர் கால்வாய்கும் பணி | 6200/- | Lasped Deposit Vol-III P.No. 46 Sl. No.1397 |

மேற்படி பணி முன்வைப்புத்தொகை ரூ.**6200/–** காலங்கடந்த முன்வைப்புத்தொகை பதிவேட்டில் இருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.4489/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 301, நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**7.** இந்நகராட்சி வருவாய் நிதியின்கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **28.07.2022** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | விலைப்புள் ளி மதிப்பு ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள்பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர்திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அறைக்கு 1 KVA Online UPS கொள்முதல் செய்யும் பணி. | 15000/- | ஸ்ரீ அபிராமி டையர்ஸ் மற்றும் வீல் கேர், சீர்காழி | ரூ.16000 மதிப்பீட்டை விட அதிகம் | ஸ்ரீ அபிராமி பேட்டரி மயிலாடுதுறை. |
| | | | Sun Power Packs மயிலாடுதுறை | ரூ1.5500 மதிப்பீட்டை விட அதிகம் | |
| | | | ஸ்ரீ அபிராமி பேட்டரி மயிலாடுதுறை | ரூ.14999 மதிப்பீட்டை விட குறைவு | |

**அலுவலக குறிப்பு.**

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்.6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள நிறுவனத்தாரின் விலைப்புள்ளினை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதை இம்மன்றம் ஏற்கலாம்.

**e.f.vż: 3010/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 302 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**8.** மயிலாடுதுறை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள 5.85 MLD கொள்ளளவுள்ள கழிவு நீர் சுத்திக்கரிப்பு நிலையத்தின்மூலம் கழிவு நீர் சுத்திக்கரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.17021/2021/EA1, நாள் : 11.05.2022ல் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் (NGT) வழிகாட்டுதலின்படி கழிவு நீர் சுத்திக்கரிப்பு நிலையங்களில் இணையதளம் வழி தொடர்ச்சியான கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring System (OCEMS) நிறுவுவதற்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் கடந்த 10.11.2022 அன்று நடைப்பெற்ற Empowerad Committee கூட்டத்தில் இணையதளம் வழி தொடர்ச்சியான கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring System (OCEMS) நிறுவுவதற்கு மூலதன மானிய நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி 2021–2022ல் (Capital Grand Fund and O&M Gape Filling Fund) ரூ.41.72 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இந்நகர்மன்ற தீர்மாண எண்.66 நாள் 27.05.2022 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மூலதன மான்ய நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி (2021–2022) (Capital Grand Fund and O&M Gape Filling Fund) |
|---|---|---|---|
| 1. | 5.85 MLD கொள்ளளவுள்ள ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திக்கரிப்பு நிலையத்தில் இணையதளம் வழி தொடர்ச்சியான கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு நிறுவும் பணி. | ரூ.41.72 | ரூ.41.72 |

மேற்கூறிய பணிக்கு 11.05.2022 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் நிறுவனங்கள் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர்.

1. Sansel Instruments and Controls, Contractor, Chennai
2. RL TECHNOLOGIES PVT.LTD, Contractor, Chengalpattu
3. Swaraj Equipement Private Limited Contractor, Chennai.
4. PT Ecological Services Private Limited Contractor, Maharastra.

மேற்குறிப்பிட்டுள்ள நான்கு நிறுவனங்களும் வழங்கிய ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப கூராய்வு செய்யப்பட்டதில் M/S. Sansel Instruments and Controls, Contractor, Chennai, Swaraj Equipement Private Limited Contractor, Chennai, PT Ecological Services Private Limited Contractor, Maharastra. ஆகிய மூன்று நிறுவனங்கள் தொழில்நுட்ப ரீதீயாக தகுதிபெறவில்லை.

M/S. RL TECHNOLOGIES PVT.LTD, Contractor, Chengalpattu என்ற நிறுவனம் மட்டும் தொழில்நுட்ப கூராய்வில் தகுதி பெற்றதின் அடிப்படையில் 25.05.2022 அன்று விலைவிகிதம் அடங்கிய உறை திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

**(OCEMS) நிறுவும் பணி**

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்ததாரர் கோரிய தொகை | ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | 5.85 MLD கொள்ளளவுள்ள ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திக்கரிப்பு நிலையத்தில் இணையதளம் வழி தொடர்ச்சியான கழிவு நீர் கண்காணிப்பு அமைப்பு நிறுவும் பணி. | ரூ.41,72000/– | M/S. RL TECHNOLOGIES PVT.LTD, Contractor, Chengalpattu | ரூ.40,93,533/– | ரூ.40,93,533/– |



அ) OCEMS நிறுவும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.40,93,533/– ஐ வழங்கியுள்ள M/S. RL

TECHNOLOGIES PVT.LTD, Contractor, Chengalpattu நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ஆ) OCEMS நிறுவும் பணிகளுக்கு ஒப்பந்தத்தொகையில் ரூ.41,72,000/- ஐ மூலதன மானிய நிதி, இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி 2021–2022ல் (Capital Grand Fund and O&M Gape Filling Fund) லிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசரம் அவசியம் முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/S.RL TECHNOLOGIES PVT.LTD, Contractor, Chengalpattu நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1543/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 303 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**9.** மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN.51. S.1077 எண்ணுள்ள JCB வாகனம் அதிக அளவில் பழுது ஏற்பட்டு இயக்க சிரம நிலையில் உள்ளதால் இதனை உடனடியாக சீர் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,98,500/– ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமது வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி JCB வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Mrs. DYNATECH THIRUVARUR நிறுவனத்தில் நேரிடையாக பழுது நீக்கம் செய்யும் பணியினை மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.

3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 4271/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 304 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**10.** மயிலாடுதுறை நகராட்சியில் 2020–2021, 2021–2022 மற்றும் 2022–2023–ஆம் நிதியாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் நடைபெற்றுவரும் திட்ட பணிகளின் விபரத்தை தினகரன், தினமலர், தினதந்தி, தினமணி, மாலை மலர் மற்றும் தின பூமி ஆகிய நாளிதழ்களில் வெளியிடப்படும் ஆண்டு தொழில் மலரில் பிரசுரம் செய்திட மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை அவர்களின் கடித ந.க.எண்.46–6/செமதொஅ/2022–ல் அறிவுறுத்தப்பட்டதன்படி திட்டப்பணிகளின் விபரத்தை மேற்கண்ட நாளிதழ்களின் தொழில் மலரில் வெளியிடப்பட்டுள்ளது.

தற்பொழுது மேற்கண்ட விபரப்படி பிரசுரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின் வருமாறு,

| வ.எண். | நாளிதழ் பெயர் | பட்டியல் தொகை %. |
|---|---|---|
| 1 | தினகரன் / KAL Publication | 39900/– |
| 2 | தினமலர் / K.M. Kalaivanan, Mayiladuthurai | 26200/– |
| 3 | தின தந்தி / Daily Thanthi | 34280/– |
| 4 | தினமணி / Express Publication (Madurai) Pvt.ttd | 9800/– |
| 5 | மாலைமலர் / Malar Publication Ltd | 18000/– |
| 6 | தினபூமி / Thina boomi | 21000/– |
| | **கூடுதல்** | **1,49,180/–** |

மேற்கண்ட கூடுதல் தொகை ரூ. 1,49,180/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1 . அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிகள் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 04163/2022/ இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 305 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**11. இந்நகராட்சி 26–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. அ. ராமச்சந்திரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்:-**

1. தனது வார்டில் உள்ள வாய்க்காங்கரைத்தெரு, சாலைக்காரத்தெரு, புனுகீஸ்வரர் தெற்கு வீதி, மேலவீதி, வடக்கு வீதி, கீழவீதி ஆகிய அனைத்து தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் கல்வெட்டு அனைத்தும் சேதமடைந்துள்ளதால் அவற்றை புதுப்பித்துத்தர வேண்டி.

2. தனது வார்டில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க புனுகீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள சன்னதி தெருவில் உள்ள சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்றி அமைத்துத்தர வேண்டி.

3. தனது வார்டில் புனுகீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான திருக்குளம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அதனை சுத்தம் செய்து அதற்கு காவிரி நீர் வருவதற்கு வழிவகை செய்ய வேண்டி.

**<u>மன்றத் தீர்மானம் எண். 306 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**12. இந்நகராட்சி 13–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ச. ரத்தினவேலு அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்:-**

1. தனது வார்டில் உள்ள வ.உ.சி தெரு, பெரிய எரகலித்தெரு திருப்பத்தில் மழைநீர் குளம் போல் நிற்கிறது. பாதசாரிகளும், பள்ளி சிறார்களும் நடந்து செல்லுவதற்கும், வாகனத்தில் செல்வதற்கும்

சிரமமாக உள்ளதால் அந்த இடத்தில் கல்வெர்ட், மழைநீர் வடிகால் அமைத்துதர தீர்மானிக்க வேண்டி.

2. அய்யனார் கோயில் தெரு சந்து (அம்மன் பால் பண்ணை சந்து) சிமெண்ட் ரோடு மிகவும் மோசமாகவும் குண்டும் குழியுமாக உள்ளது. அதில் சிமெண்ட் சாலை போடுவதற்கும், அதை ஒட்டி உள்ள மழைநீர் வடிகாலில் தடுப்பு சுவர் அமைத்து தர வேண்டி.

**<u>மன்றத் தீர்மானம் எண். 307 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு:** **பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**13. 1-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஜெயந்தி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட அண்ணாநகர் ஸ்ரீசிறுவாஞ்சூர் மதுர காளியம்மன் ஆலய கும்பாபிஷேக திருப்பணி நடைபெற இருப்பதால் ஆலயம் அருகில் உள்ள மினிபவர் வாட்டர் டேங்கை வேறு இடத்திற்கு மாற்றி தர வேண்டி.

2. தனது வார்டுக்குட்பட்ட பொட்டவெளி பேருந்து நிலையம் அருகில் மெயின் ரோடு கல்லணை மெயின்ரோடு என்பதால் இவ்விடத்தில் அதிகமான விபத்துகள் ஏற்படுகிறது. ஆகையால் வேகத்தடை அமைத்து தர வேண்டி.

3 தனது வார்டுக்குட்பட்ட மாப்படுகை ரோடு சாந்துகாப்புத்தெரு இணைக்கும் மாப்படுகை மெயின் ரோடில் அடிக்கடி விபத்து நடைப்பெறுவதால் அங்கு வேகத்தடை அமைத்து தர வேண்டி.

4. தனது வார்டுக்குட்பட்ட ருவிழுந்தூர் மேலவீதியும் தெற்கு வீதியும் திரும்பும் தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகிறது. ஆகையால் இவ்விடத்தில் வேகத்தடை அமைத்து தர வேண்டி

**<u>மன்றத் தீர்மானம் எண். 308 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு:** **பதிவு செய்யப்பட்டது. வ.எண். 1–ல் உள்ள மினிபவர் டேங்கை வேறு இடத்திற்கு மாற்றம் செய்திடுவதற்கு உதவி பொறியாளரின் அறிக்கை பெற்று அதன்பின்பு பொருள் வைக்கலாம் எனவும் மீதம் உள்ள பொருள்களுக்கு நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**14. 34–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. கார்த்திக் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்:-**

தனது வார்டுக்குட்பட்ட JAY KAY GARDAN சங்கீதம் நகர் செல்லும் சாலை ( பட்டமங்கல புதுத்தெரு, ஸ்ரீநகர் காலனி) –யில் புதியதாக விதிக்கப்பட்ட சொத்து வரியானது A-Zone –ல் உள்ளதால் அதனை சுற்றியுள்ள (34–வது வார்டுக்குட்பட்ட) சங்கீதம் நகர், சங்கீதம் நகர் விரிவாக்கம், P.S. நகர் மற்றும் சத்ய சாய் நகர், சத்யசாய் நகர் விரிவாக்கம், போன்றவை C-Zone – மற்றும் B-Zone –ல் வருவதால் JAY KAY GARDAN சங்கீதம் நகர் செல்லும் சாலை ( பட்டமங்கல புதுத்தெரு, ஸ்ரீநகர் காலனி) –யில் விதிக்கப்பட்ட சொத்து வரியினை C-Zone –ற்கு ஆய்வு செய்து மாற்று தர வேண்டி

**<u>மன்றத் தீர்மானம் எண். 309 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு:** **பதிவு செய்யப்பட்டது. இடத்தினை ஆய்வு செய்து வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் அலுவலரின் குறிப்பு பெற்று மன்ற அனுமதி பெற தீர்மானிக்கப்பட்டது.**

**15. 33–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. இரா. நடராஜன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்:-**

1. மடத்து சந்து விடுபட்ட பகுதி 3 UGD மேனுவல் அமைத்துதர வேண்டி.

2. மடத்து சந்து 63வர் பேட்டை மழலையர்பள்ளி எதில் மின் ஒயர்கள் தாழ்ந்து தொங்கி கொண்டு உள்ளதால் அவ்விடத்தில் மின்கம்பம் ஒன்று அமைத்து தர வேண்டி.

3. தோப்பு தெரு (முறுக்கு கம்பெனி பகுதி) 3 UGD மேனுவல் அமைத்து தர வேண்டி.

**<u>மன்றத் தீர்மானம் எண். 310 நாள்: 30.11.2022</u>**

**அலுவலக குறிப்பு:** **அனுமதி அளிக்கப்பட்டது.**

நாள்:28.11.2022

நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.